**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 174 of 2022

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.தனபால்

Date : 19.09.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2) என்னுடைய பூர்வீகம் நடுப்பட்டி கிராமம் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும் போது எனக்கு 8 வயது இருக்கும் என்றால் இல்லை. எனக்கு 15 வயது. அப்போது வாதி முருகனுக்கு 8 வயது. 2ம் பிரதிவாதி ராஜாவிற்கு ஒரு வயது. என் அப்பா இறந்து 6 மாதத்தில் எனது அம்மா தலைமையில் என்னுடைய அண்ணன்கள் பெரியண்ணன், மணிக்கு திருமணம் ஆனாது. என் அண்ணன்கள் இருவரும திருமணம் ஆன மாதத்திலே அவர்கள் இருவரும் நான், வாதி, 2 பிரதிவாதி சிறு வயதாக இருந்ததால் எங்களுக்கு சம்பாதித்து கொடுக்க முடியாது என்று தனியாக சென்று விட்டார்கள். என் அம்மா தான் வாதி, என்னை, 2 பிரதிவாதி எல்லோரும் ஒன்றாக இருந்தோம். எனது அண்ணன்கள் தனி குடித்தனம் சென்று விட்ட பிறகு எனது அம்மா தான் எங்களை வளர்ந்தார். வாதி, 2 பிரதிவாதிக்கு நான் தான் திருமணம் செய்து வைத்தேன். பொது குடும்பத்தில் நாங்கள் எல்லோரும் உழைத்து அதில் வந்த பணத்தில் தான் எனக்கு, வாதி, 2 பிரதிவாதிக்கு திருமணம் செலவுகள் செய்யப்பட்டது. வாதி, எனக்கு, 2 பிரதிவாதி எல்லோருக்கும் திருமணம் ஆகும் வரை எல்லோரும் ஒரே குடும்பமாக தான் இருந்தோம். எனக்கு 1997லிலும், வாதிக்கு 2004லிலும், 2பிரதிவாதிக்கு 2009லிலும திருமணம் ஆனது. வாய்மொழியாக பாகம் பிரித்து நடுப்பட்டி கிராமம் சொத்து சம்பந்தமாக

பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தின் போது 2 பிரதிவாதி அரசு மேல்நிலைப்பள்ளி சோலைகொட்டாயில் 8ம் வகுப்பு படித்து வந்தார் என்றால் சரிதான். பாகபிரிவினைக்கு பிறகும் நான், வாதி, 2 பிரதிவாதி எல்லோரும் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை விவசாயம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எங்கள் பாக சொத்தில் வெற்றிலை தோட்டம், கறவை மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வந்தோம். விவசாய செலவுகளையும், குடும்பத்தில் வரவு செலவுகளையும் நானும், எனது அம்மாவும் தான் பார்த்து வந்தோம். எனக்கு விவசாயம் மற்றும் பால் வியாபாரத்தை தவிர வேறு தொழில் கிடையாது.

3) தாவா சொத்து எங்களுக்கு பாகமாக வந்த வருமானத்திலிருந்து இருந்து தான் வாங்கப்பட்டது. எனக்கும், வாதிக்கும் சேர்த்து 3 1/4 ஏக்கர் பத்திரம் செய்தோம். பிறகு 12 ஏக்கர் நிலத்தை வாதியும், 2பிரதிவாதியும் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அவர்கள் பெயரில் செய்து கொண்டார்கள். தாவா சொத்துக்களை வாங்கும் போது 2ம் பிரதிவாதி 11ம் வகுப்பு படித்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாவா சொத்தை வாங்கும் போது மைனர் என்பதால் தான் அவரது பெயரில் கிரைய பத்திரத்தில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவர் பெயரில் தனியாக 1 1/4 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது.வாதி, 2 பிரதிவாதி பெயரில் 12 ஏக்கர் நிலமும், 2 பிரதிவாதி பெயரில் 1 1/4 ஏக்கர் நிலம் வாங்கியது சம்பந்தமாக எனது பிரமாண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் சொல்லியிருக்கிறேன். நான் அதுபோல் எந்தவிவரமும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அதுபோல் பொது குடும்ப நிதியிலிருந்து வாதி பெயரிலும், 2 பிரதிவாதி பெயரிலும் கிரையம்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிருரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் வாய்மொழி பாகபிரிவினை அடிப்படையில் யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன். நான் அதுபோல் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4) வாதியின் மனைவிக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளதா என்றால் கணவரின் சொத்தில் மனைவிக்கும் உரிமையுள்ளது. வாதி ஊரில் இல்லாத நேரத்தில் அவருடைய மனைவி தவறான வழக்கு போட்டுள்ளார் என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த வழக்கு வாதியின் தவறுகைக்காக தள்ளுபடியாகி விட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் அவருடைய கணவரின் சொத்துக்களில் பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் முருகன் பாகத்தில் முருகன் வீடும், ஒரு மாட்டு கொட்டாயும், என் பாகத்தில் என் வீடும், ஒரு மாட்டு கொட்டாயும் உள்ளது. பாகமே ஏற்படவில்லை என்றாலும் இரண்டு வீடும், மாட்டு கொட்டாயும் உள்ளது என்றால் சரியல்ல. பாகம் பிரித்து 22 வருடங்கள் ஆகிவிட்டது. வழக்கு போடும் போது நான் பேஸ்மெண்ட் எழுப்பியிருந்தேன். பாரத பிரதமா வீடு கட்டும் திட்டத்தின் கீழ் என்னுடைய இடத்தில் வீடு கட்ட உரிமையிருந்ததால் என்னுடைய இடத்தில் வீடு கட்டிவிட்டேன். பாகம் பிரிக்காமல் சொத்தில் நான் வீடு கட்டியது தவறு என்றால் சரியல்ல. பொது குடும்ப பால் வியாபாரத்திலிருந்து தான் நான் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கி தான் வீடு கட்டினேன். அந்த வீடு கட்டுவதற்காக கடன் எனது மனைவி ஏரி வேலை செய்ததால் அவா பெயரில் கடன் கொடுக்கப்பட்டது. வழக்கு சொத்தில் எனது

மனைவிக்கு உரிமையில்லை என்றால் என்னுடைய சொத்தில் எனது மனைவிக்கும் உரிமையுள்ளது. என் மனைவியின் சகோதரர் சித்தன் பஞ்சாயத்து துணை தலைவராக உள்ளார் என்றால் சரிதான். என்னுடைய மனைவிக்கு உரிமையில்லாத சொத்தில் என் மனைவியின் சகோதரர் பஞ்சாயத்து துணை தலைவராக இருப்பதால் அவருடைய அதிகாரத்தை துஸ்பிரியோகப்படுத்தி என் மனைவி பெயரில் தவறான ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.7 என் மனைவி பெயரில் உள்ளரசீதுகள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் நான் குடும்பத்தில்/கர்த்தா என்ற முறையில் ஏற்பட்டது என்றாலும் அது தனி பட்ட முறையில் என்னை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 தருமபுரி மத்திய கூட்டுறவு சங்கத்தில் வாங்கப்பட்ட கடன்கள் பொது குடும்ப நிர்வாகி முறையில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அவர்களும் கடன் வாங்கினார்கள். நானும் கடன் வாங்கினேன். வாதியும், 2 பிரதிவாதியும் பொது குடும்ப நிதியிலிருந்து அவர்கள் பெயரில் தனியாக சொத்துக்களை வாங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி வெளிநாட்டில் சென்று சம்பாதித்த பணத்திலும், அவருடைய மாமியார் வீட்டில் கொடுத்த பணத்திலும் அவர் பெயரில் தனிப்பட்ட முறையில் சொத்து வாங்கினார் என்றால் சரியல்ல.2பிரதிவாதி சென்னையில் வேலை செய்தார் அப்போது அவருக்கு மாதம் ரூ10000/. தற்போது என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி சென்னையில் மாதம் ரூ 1 லட்சம் சம்பளம் வாங்கினார் என்றாலும், காய்கறிகள் ஏற்றுமதி தொழில் செய்து வந்த

வருமானத்தில் அவர் பெயரில் தனியாக சொத்துக்கள் வாங்கினார் என்றால் சரியல்ல. பொது குடும்ப நிதி சம்பந்தமாக வாதி கணக்கு கேட்ட போது நான் கொடுக்க மறுத்து தாவா சொத்தில் பாகம் இல்லை என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நான் தற்போதும் பால் வியாபாரம் செய்து வருகிறேன். தாவா சொத்தை மூன்றாக பிரித்து வாதிக்கும், 2 பிரதிவாதிக்கும் தலா ஒரு பாகம் கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

O.S. 174 of 2022

Deposition of D.W. 2 } Prosecution } Defence }

Name of the Witness : திரு.மாது

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemanly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 19.09.2024

**முதல் விசாரணை**

நான் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். நான் இத்துடன் என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை ஏற்றுகொண்டு உத்திரவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.